**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO-34/2024**

**Dated :27.11.2025**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (DefactoComplainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சசிகலா | வயது | : | 40 |
| கணவர் பெயர் | : | கார்த்திக் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | ஆதனக்கோட்டை | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் உறவினர் ஆவார். கடந்த சுமார் 1 ஆண்டுக்கு முன்பு ஒரு நாள், நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, அம்பேத்கர் நகரில் இருந்து, தண்ணீர் டேங்க் பாலக்கட்டை அருகில் சென்று கொண்டிருந்த போது, காலை நேரத்தில், அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர், அசிங்கமாக பேசி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்து விட்டு ஓடி விட்டார் என்றும் அவர் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரி ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர் தான் அவ்வாறு செய்திருப்பார் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்து விட்டேன். அதன் பின்னர் தான் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. நானும், எதிரியும் உறவினர் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையொப்பம் செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:**

1. போலிசார் விசாரணையில் கடந்த 09.04.2024 ஆம் தேதி காலை நேரத்தில், மணியளவில் நான் அம்பேத்கர் நகரில் இருந்து, தண்ணீர் டேங்க் பாலக்கட்டை அருகில் சென்று கொண்டிருந்த போது,அங்கு வந்த எதிரி, என்னை அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், வழக்கு சம்பவத்தில் நான் பாதிக்கப்பட்டேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை – இல்லை**

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.நா.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.